முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

முன்னிலை: திரு.ஜெ. ஆன்ஸ் ராஜா, பி.ஏ., பி.எல்.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, வள்ளியூர்

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண். 31 / 2024**

M. பார்த்திபன் ... வாதி

//எதிர்//

1) R.சகுந்தலா

2) J.அந்தோணி மைக்கிள்ராஜா

3) J.மைக்கிள் எல்டன்

4) டன்ஸ்டன் ... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 29.04.2026 ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்னிலையில் இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சகாதேவன் ஐயர்,B.Com.,B.L., அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சுபாஷ்,M.Sc.B.L., அவர்கள் ஆஜராகியும், வழக்கானது விசாரணைக்காக பட்டியலிடப்பட்டிருந்த நிலையில், வாதியின் வருகையின்மையின் காரணமாகவும், வழக்கினை நடத்த வாதி முன்வராத நிலையிலும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.....

இவ்வழக்கானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை VII விதி 1 மற்றும் 2 ன் கீழ்

அ) பிராது 1-ம் தபசில் சொத்திற்கு சென்றுவர 1-ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 2-ம் தபசில் சொத்தின் வழியாக வழி வசதியுரிமை உண்டு என விளம்புகை செய்து, அதற்கு பின்னீட்டாக வாதி 2-ம் தபசில் சொத்து வழியாக 1-ம் தபசில் சொத்திற்கு சென்று வருவதை 1-ம் பிரதிவாதியோ, அவரது வகையாட்களோ எவரேனும் எந்த வகையிலும் இடையூறு செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கும்படியும்,

ஆ)வழக்கு செலவுத் தொகை வாதிக்கு கிடைக்கும் படிக்கும்,

இ)மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது

## தீர்ப்புரை

வழக்கானது விசாரணைக்காக பட்டியலிடப்பட்டிருந்த நிலையில், வாதியின் வருகையின்மையின் காரணமாகவும், வழக்கினை நடத்த வாதி முன்வராத நிலையிலும் வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் தேதி அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- ஜெ. ஆன்ஸ் ராஜா

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

மு.மா.உ.நீ. வள்ளியூர்

அ.வ.எண். 31/2024

வரைவு / நேரிய தீர்ப்புரை

நாள் 29.04.2026